### 3. சர்க்கரை குறைபாடு நோய்கள்

கேலக்டோசிமியா என்னும் ஒரு மரபுவழி நோயை கண்டறிதல் முக்கியமாகும். கேலக்டோஸ் என்னும் சர்க்கரைப் பொருள் செரிமானமாகாமல், இரத்தத்தில் அதிகமாகத் தங்கிவிடும். இதன் காரணமாக குழந்தைகள் உடல் வளர்ச்சி ஏற்படாமல், எடை குறைந்து கண்களில் புரைகள் உருவாகி, சிகிச்சை மேலும் தாமதமானால் மூளை வளர்ச்சியும் பாதிக்கப்பட்டு திடீரென இறக்கவும் நேரலாம். இவற்றைத் தடுக்க அனைத்து பிஞ்சுக் குழந்தைகளுக்கு பரிசோதனை அவசியம்.

## எம்முறையில் பரிசோதனைகள் நடக்கும்? பின்விளைவுகள் உண்டா?

பிறந்த 3 முதல் 7 நாட்களுக்குள், குழந்தையின் குதிகாலில் குறிப்பிட்ட இடத்தில் சிறப்பு பயிற்சி பெற்ற செவிலியர்கள் மற்றும் மருத்துவர்கள் இரத்த பரிசோதனை செய்வார்கள். குழந்தைகளுக்கு வலி அதிகமாக இல்லாமல் இரத்தக் கசிவு ஏற்படாமல் பாதுகாப்பான அங்கீகாரம் பெற்ற கருவிகள் மூலமே சோதனை மேற்கொள்ளப்படுகிறது.

### 4.சிகப்பு இரத்த அணுக்கள் திடம் இல்லாமை

நமது உடலின் சிகப்பு இரத்த அணுக்கள் சரிவர இயங்க, G6 PD என்னும் செரிமானப் பொருள் அவசியம் தேவை. இல்லையெனில், சில குறிப்பிட்ட உணவுகள், மருந்துகள் உட்கொள்ளும் பொழுது, அணுக்கள் அழிந்து, கடுமையான இரத்தச் சோகை ஏற்பட்டு, மஞ்சள் காமாலை மற்றும் சிறுநீரக பாதிப்பு ஏற்படலாம்.

இந்த நோய் உள்ளதா? என்று அறிய, அனைத்து குழந்தைக்களுக்கும் இரத்தப் பரிசோதனை செய்தால் தான் தெரியும். பரம்பரையாக மற்றும் தன்னிச்சையாகவும் வரலாம்.

### 5. கணையம் செயலாமை நுரையீரல் இயலாமை

பாதிப்பு உள்ள குழந்தைகள் சரியாக வளர்ச்சி ஏற்படாமல், கணையத்தின் வேலை பாதிக்கப்படலாம். அடிக்கடி நுரையீரல்கள் செயல் இழக்க நேரலாம்.

அதன் விளைவாக மலக்கோளாறுகள் ஏற்படும். ஆண் குழந்தைகளின் பிறப்புறுப்பு கோளாறுகள் உண்டாக அதிக வாய்ப்புண்டு. எனவே, பிறந்தவுடன் மிக எளிதான இந்த பரிசோதனைகளை செய்து காப்போம்.

**வளமான வருங்காலம் வர கண்டறிதல் பரிசோதனை செய்க**

## எப்போது சோதனை முடிவுகள் தெரியவரும்?

பரிசோதனை முடிந்து குழந்தையின் பெற்றோரிடம் மற்றும் மருத்துவ குழுவினரிடமும் முடிவுகள் வழங்கப்படும். நோயின் தன்மைக்கேற்ப ஆலோசனைகள் வழங்கப்படும். சோதனை முடிவுகள் 5 முதல் 7 நாட்களுக்குள் தெரியவரும்.

எனவே "நமது வருங்கால சந்ததிகளைக் காக்க, நலமான வாழ்வு அளிக்க அனைவரும் பிறக்கும் எல்லா குழந்தைகளுக்கும் நோய் கண்டறிதல் பரிசோதனை செய்வோமாக".

**ஒரு சில இரத்தத்துளிகளே (4 முதல் 5 துளிகள்) அளித்து குடும்பத்தில் அனைவரது கண்ணீர்த் துளிகளை தடுப்போம்.**

**குழந்தைகளின் மூளை வளர்ச்சியை பாதிக்க கூடிய மற்றும் பாதிப்பை தடுக்க கூடிய மிக முக்கியமான காரணி 'தைராய்டு ஹார்மோன்' சுரப்பி.**

**நன்றி**



**MediScan**

Ultrasound | Fetal Care | Genetics

# பச்சிளங்குழந்தைகள் இரத்த பரிசோதனை முறைகள்





## கண்டறிந்து காத்தல்

தொலை பேசி

+91 - 90940 21665 | 90944 20302

# வருங்கால சந்ததிகளின் பாதுகாப்பிற்கு

பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தைக்கும் ஆரோக்கியமாக வாழ உரிமை உண்டு. எனவே பெற்றோர் அனைவரும் தங்கள் குழந்தைகளுக்கு இரத்த பரிசோதனை செய்வது கடமையாகும்.

## ஏன் பச்சிளங்குழந்தைகளுக்கு கண்டறிதல் பரிசோதனை செய்ய வேண்டும்?

மனித உடலில் ஏற்படும் சில நோய்கள் இரசாயன மாற்றங்களை நமது இரத்தத்தில் வெளிப்படுத்தும். இந்த இரசாயன பொருட்களின் அளவுகோள்களை எளிய முறையில் குழந்தை பிறந்த 3 முதல் 7 நாட்களுக்குள் பரிசோதனை செய்ய வேண்டும். விரைவாக கண்டுபிடித்து சிகிச்சை அளிக்க இந்த புதிய முறை உதவும். முக்கியமான சில நோய்கள் (எ.க) நாளமில்லா சுரப்பிகள் குறைவாக அல்லது அதிகமாக சுரப்பதன் மூலம் ஏற்படும். நமது உயிர் அணுக்களின் செயல்பாடுகள் மூலம் நிகழும் திரவிய மாற்றங்களை இந்த பரிசோதனை செய்வதால் மட்டுமே விரைவில் கண்டறிய முடியும். உடனே சிகிச்சை அளிப்பதால் குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றி வாழ்க்கையை ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் மாற்ற முடியும்.

## என்னென்ன நோய்களை கண்டுபிடிக்கலாம்?

### 1. தைராய்டு சுரப்பி குறைபாடுகள்

தைராய்டு சுரப்பி ஒவ்வொரு பிஞ்சுக்குழந்தையின் உடல், மனம் மற்றும் மூளை வளர்ச்சிகளுக்கு மிகவும் அவசியம். நோயை ஊர்ஜீதப்படுத்தி குழந்தை பிறந்த 2 முதல் 3 வாரங்களுக்குள் சிகிச்சையை ஆரம்பித்தல் குழந்தையின் எதிர்காலத்தை ஒளிமயமாக்கும். பச்சிளங்குழந்தை என்று சோதனை செய்யாமல் பின்பு அறிகுறிகள் அதிகமாக தோன்றி மூன்று மாதங்கள் கடந்த பிறகு மருந்துகள் அளித்தாலும் பாதிப்புகள் நிரந்தரமாகும் வாய்ப்புகள் அதிகம். மந்த புத்தி, மறதிகள், உயரக் குறைவு மற்றும் குடல் நோய்களும் ஏற்படலாம்.

அனைவரும் நலமாக உள்ள குடும்பங்களிலும் தைராய்டு சுரப்பி குறைபாடுகள் தன்னிச்சையாகவும் ஏற்படும். குடும்பத்தில் தைராய்டு நோய்கள் ஏற்கனவே இருக்கும் பட்சத்தில் இவை மீண்டும் ஏற்படலாம். எனவேதான் அனைத்துக் குழந்தைகளுக்கும் பரிசோதனை அவசியம் செய்ய வேண்டும்.

### 2.அட்ரீனல் சுரப்பிகள் குறைபாடு

நமது நாட்டில் சில நோய்கள் அதிகமாக இருக்கும் சூழ்நிலைகள் உள்ளன. திருமணங்கள் உறவுகளிடையே நடைபெறுவது பாரம்பரியமாக தொடர்கிறது. அதனால் பரம்பரை நோய்களும் அதிகமாக ஏற்படுகின்றன. (எ-க) அட்ரீனல் சுரப்பிகள் சரியாக உருவாகாமல் ஆண் / பெண் பிறப்புறுப்புகள் வளர்ச்சி பாதிப்பு, இரத்த அழுத்த குறைவு மற்றும் நோய் எதிர்ப்பு சக்திகள் குறைந்து உயிரிழக்கும் அபாயம் உள்ளது. மேலும், ஆண் குழந்தைகளுக்கு இந்த நோயின் அறிகுறிகள் கண்டுபிடிப்பது மிகவும் கடினம். பிறந்த ஒரு சில நாட்களில் திடீரென குழந்தைகள் இறந்தும் போகலாம்.

பெண் குழந்தைகளுக்கு உறுப்புகள் உருவாகாமல், நிறங்கள் கறுத்து, வளர்ச்சி பாதித்து அவர்களின் வாழ்க்கையை நிலைகுலைத்துவிடும். இவற்றை தடுக்க ஒரே வழி பிறக்கின்ற ஒவ்வொரு பச்சிளங்குழந்தைக்கும் இந்த எளிய இரத்த பரிசோதனை செய்து விரைவாக சிகிச்சை அளிப்பது தான். இந்நோய்கள் ஒரே குடும்பத்தில் பரம்பரையாக தொடரும் வாய்ப்புகள் அதிகமாக இருப்பதால் அதனை கருவிலே பரிசோதனை செய்து சிசு கருப்பையில் இருக்கும்போதே மருந்துகள் தாய் மூலம் செலுத்தி குணப்படுத்தலாம். குடும்ப ஆலோசனைகள் வழங்கி பாதிக்கப்பட்ட சிசுக்களைப் பெறாமல் தடுக்கலாம்.



## குதிகால் பரிசோதனை முறை

- முதலில் குதிகாலை மிதமான சுடுநீரினால் சுத்தப்படுத்த வேண்டும்.
- குறிப்பிட்ட இடத்தில் மட்டும் உரிய ஊசியால் பரிசோதிக்க வேண்டும்.
- முதல் இரத்தத் துளியை தவிர்த்து அடுத்த சில துளிகளை பயன்படுத்த வேண்டும்.
- பரிசோதனை அட்டையில் உள்ள வட்டங்கள் முழுவதும் பரவும் அளவுக்கு இரத்த துளிகளை சொட்டவிட வேண்டும்
- பின்பு அட்டைகளை கை படாமல் உலரவைக்க வேண்டும்
- நன்கு உலர்ந்ததும் பாதுகாப்பாக பரிசோதனை நிலையத்திற்கு அனுப்ப வேண்டும்

## பரிசோதனை அட்டையில் இருக்க வேண்டிய அவசியமான தகவல்கள்

- பெயர்
- பிறந்த தேதி
- பாலினம்
- பிறந்த போது எடை
- குடும்ப குறிப்புகள்
- தாய்-சேய் மருந்துகள் விவரம்
- குழந்தையின் தற்போதய உடல் நிலை
- இரத்தம் செலுத்திய விவரங்கள்
- பரிசோதனைக்கு இரத்தம் எடுத்தபோது குழந்தையின் வயது






